விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 084 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 29 செவ்வாய்க்கிழமை (12.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## வெடுக்குநாறிமலையில் அரங்கேறிய
# பொலிஸாரின் அடாவடியை
# கண்டித்து நல்லூரில் போராட்டம்





(யாழ்ப்பாணம்)
வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அரங்கேறிய பொலிஸ் அராஜகத்தைக் கண்டித்து நல்லூரில் கண்டனப் போராட்டமொன்று முன்னெடுக்கப் பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நீரை சிக்கனமாக பயன்படுத்த கோரிக்கை

(கொழும்பு)
நிலவும் வரட்சியான கால நிலை காரணமாக நீரைச் சிக் கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை மக்களைக் கோரியுள் 15

### அரச ஊழியர்களுக்கு
## ஏப்ரலில் சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)
அரச ஊழியர்களின் சம் பளத்தில் பத்தாயிரம் ரூபாய் சம்பள உயர்வு கிடைக்கும் என ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தெரி 15

## எனது அழைப்பை ரணில் மட்டுமே அச்சமின்றி ஏற்றார்
### கோட்டாபய தெரிவிப்பு



(கொழும்பு)
பிரதமர் பதவியை பொறுப்பேற்கு மாறு தன்னால்விடுக்கப்பட்ட அழைப் பினை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மாத்திரமே அச்சமின்றி 15


### ஐ.எம்.எப்புடனான அனைத்து நடவடிக்கைகளையும்
## வெளிப்படையுடன் செயற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் - ரணில்

(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத் துடனான அனைத்து நடவடிக் கைகளையும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுத்து வதே அரசாங்கத்தின் நோக்க மாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் ளார்.
சர்வதேச நாணய 16



### வெடுக்குநாறிமலையில் கைதான
## பூசகர் உள்ளிட்ட 8 பேரும் கைவிலங்குடன் தொடர்ந்து சிகிச்சை

(வவுனியா)
வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள் ளிட்ட 8 பேரும் கைவிலங்கு களுடன் வைத்தியசாலை யில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
மகா சிவராத்திரி தினத் தன்று வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத் 15



### வவுனியா பாடசாலையொன்றில்
## 7 மோட்டார் குண்டுகள் வெடிக்காத நிலையில் மீட்பு

(வவுனியா)
வவுனியா, மடுகந்தை தேசிய பாடசாலையில் இருந்து வெடிக்காத நிலையில் 7 மோட் டார் குண்டுகள் நேற்று மீட்கப் பட்டுள்ளதாக மடுகந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வவுனியா, மடுகந்தை தேசிய பாடசாலையில் இருந்த குப்பை குழியை துப்புரவு செய்தபோது குறித்த குழிக்குள் வெடிக்காத நிலை 15

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு
### ஒட்டுசுட்டானில் சம்பவம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு ஒட்டுசுட் டான் கரிப்பட்டமுறிப்பு பகுதி யில் யானை தாக்கியதில் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவம் நேற்று முன் தினம் காலை இடம்பெற்றுள் ளது.
கரிப்பட்டமுறிப்பு கிராமத்தினை சேர்ந்த 15

## கைதடி கிழக்கில் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி கிழக் குப் பகுதியில் உள்ள ஆலய வளாகமொன்றில் இருந்து நேற்று திங்கட்கிழமை காலை முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
காளி கோவிலடி, கைதடி கிழக்கு 15

## வட்டுவில் வாள்வெட்டு இளைஞன் உயிரிழப்பு
### முன்னர் நடந்த வாள்வெட்டுக்கு பழிதீர்க்க தாக்குதல்

(வட்டுக்கோட்டை)
வட்டுக்கோட்டை பகுதி யில் இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் இளைஞன் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.
வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 23 வயதான தவச்செல் வம் பவிதரன் என்பவரே உயிரி ழந்தவராவார்.
காரைநகருக்கு 16

நடுவு நிலை தவறாது நோக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சாரதியாக
கடமையாற்றும் த.நரேந்தன்
அவர்களுடைய அன்புத் தாயார்

அமரர் **தர்மகுலசிங்கம்**
**பாக்கியலட்சுமி**

அவர்கள் 11.03.2024 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
**பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.** (C-8514)

தோற்றம் 19.02.1950 மறைவு 11.03.2024

# மாங்குளம் வீதியில் பொலிஸாரின் வாகனம் தடம்புரண்டு விபத்து



முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்குரிய பொலிஸ் வாகனம் ஒன்று ஒட்டிசுட்டான் மாங்குளம் வீதியில் வேக கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

நேற்று மாலை குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றது.

முள்ளியவளையில் இருந்து மாங் குளம் நோக்கி பயணித்த பொலிஸ் வாகனம் மீண்டும் மாங்குளத்தில் இருந்து ஒட்டு சுட்டான் நோக்கி பயணித்த போது தச்சடம்பன் பகுதியில் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியினை விட்டு விலகி தடம் புரண்டுள்ளது.

இதன் போது சாரதி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

விபத்து தொடர்பாக மாங்குளம் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7.10.299)

## திருநெல்வேலி - கிழக்கு வாலை அம்மன் சனசமூக நிலையம்

## வருடாந்த பொதுக்கூட்டம் 2024

**இடம் - வாலை அம்மன் சனசமூக நிலையம்**
**காலம் - 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 3.30 மணி**

சகல அங்கத்தவர்களும் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த சந்தாப்பணத்தினை 15.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவும்.

நன்றி

மேலதிக விபரங்களுக்கு :
**077 482 1969**

நிர்வாகம்
வாலை அம்மன் சனசமூக நிலையம் (046)

## அலுவலக உதவியாளர் தேவை

நிறுவன பணிகளுக்கான
பெண் உதவியாளர்
உடன் தேவை.
(காலை 9 - மாலை 5)
செயல்திறனுக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
நேரடியாக வருகை தரவும்.
தூரிகை - நெல்லியடி (C-8517)

**077 914 3171**

## துப்பாக்கிச்சூடு; இருவர் பலி

அம்பலாங்கொட பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக் கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அம்பலாங்கொடை கலகொட பகுதியில் உள்ள கடை ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் காய மடைந் தனர். காயமடைந்தவர்கள் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7.10)

## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்

## அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம் - வகை II**
2. **யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் - வகை II**
3. **யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை - வகை II**
4. **யா/கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம் - வகை II**
5. **யா/உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலை - வகை II**

**தகைமைகள்**

- வகை II பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம்** II மற்றும் **தரம்** III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.
- **இலங்கை அதிபர் சேவை தரம்** II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் **தரம்** III அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்று வருடகாலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 3 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், பிரதி உதவி, அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

**குறிப்பு :**

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தங்களின் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக **2024.03.26** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் **"வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2024(I) "** எனக் குறிப்பிடவும்.

**திரு.பொ.ரவிச்சந்திரன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(C-8515)

## மரண அறிவித்தல்

தோற்றம் 1948 . 11 . 27



மறைவு 2024 . 03 . 10

## சற்குணதேவி முத்துராசா (முத்தக்கா)

நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் A9 வீதி கரடிப்போக்கு கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணதேவி முத்துராசா (முத்தக்கா) அவர்கள் நேற்று முன்தினம் (10.03.2024) காலமானார்.

அன்னார் முத்துத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் முத்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் முத்தையா முத்துராசா (ஓய்வுநிலை கரைச்சி பிரதேச சபை பிரதம எழுதுவினைஞர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரவீந்திரன் (முன்னாள் அதிபர் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, முன்னாள் பிரதி அதிபர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி) காலஞ்சென்ற பாரதி வித்தியானந்தன் (பவா) மற்றும் குவேந்திரன் (குட்டி - ஹலோ றஸ்ற் பணியாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசக்தி (கோப்பாய்), வித்தியானந்தன் (கிளிநொச்சி), காயத்திரி (காயா - வட்டக்கச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் தெய்வேந்திரம் (மீசாலை) அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாலராஜாவின் மைத்துனியும் துளசிகா (மத்திய வங்கி பிராந்திய அலுவலகம், கிளிநொச்சி), சாம்பவி (பொதுச் சுகாதார ஆய்வுகூட தொழினுட்பவியலாளர் - மலேரியா தடை இயக்கம் மாங்குளம்), சங்கமன் (GIZ அறிவியல் நகர்), திர்ஷாந்தினி (கனடா), ஜயவி (உயர்தர மாணவி - கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), அகலினியன், அபினகா (மாணவர்கள் - கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (12.03.2024) காலை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணிக்கு திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

A9 வீதி, காமய்போக்கு,
கிளிநொச்சி.

(C-8513)

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 252 மருந்துப் பொருட்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு

## மருத்துவர் சாமல் சஞ்சீவ

(கொழும்பு)

**நாட்டில் சுமார் 252 மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் மருத்துவர் சமால் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

முன்னாள் சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் பதவி விலகி ஐந்து மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தற்போதைய சுகாதார அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் மருந்துப்பொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வு வழங்கவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரதேச மருத்துவமனைகளில் மருந்துக் கொள்வனவு செய்வதற்காக மருத்துவமனை பணிப்பாளர்களுக்கு நிதி வழங்கும் திட்டமொன்று நடைமுறையில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடைமுறையினால் முறைகேடுகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும், மருந்துப்பொருள் கொள்வனவு கிரமப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (5-6)

# நாமல் விரைவில் எதிர்க்கட்சித் தலைவராவார்

## விமல் வீரவன்ச

(கொழும்பு)

நாமல் ராஜபக்ஷ விரைவில் எதிர்கட்சி தலைவராக பதவியேற்பார் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் "எதிர்வரும் சித்திரை மாதம் ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில்பசில் ராஜபக்ஷவின் நடவடிக்கையின் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாரளுமன்ற உறுப்பினர்கள் அணி ஒன்று அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சிக்கு செல்லவுள்ளது.

அத்துடன் நாமல் ராஜபக்ஷ எதிர்க்கட்சி தலைவராகும் வாய்ப்புள்ளதுடன் ரணில் விக்கிரமசிங்கவுடன் சஜித் பிரேமதாஸவை இணைக்கும் நடவடிக்கை ஒன்றையும் இந்தியா மேற்கொண்டு வருகிறது. (5-6)

# இலங்கைக்கு கடத்த முயன்ற 400 கிலோ கஞ்சா பறிமுதல்

(கொழும்பு)

இலங்கைக்குக் கடத்துவதற்காக இறால் பண்ணையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 400 கிலோ கஞ்சா தமிழகத்தில் மீட்கப்பட்டுள்ளது.

தொண்டி கடல் வழியாக நாட்டுப்படகில் இலங்கைக்குக் கடத்துவதற்காக இறால் பண்ணையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 400 கிலோ கஞ்சா மூட்டைகளை திருச்சி மத்திய நுண்ணறிவுப் பிரிவு சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தக் கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய எஸ்.பிபட்டினத்தைச் சேர்ந்த நபரைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர். (5-6)

# உலகில் மிகக் குறைவான நாட்கள் வேலைசெய்யும் நாடு இலங்கை

## கருஜெயசூரிய

(கொழும்பு)

உலகில் மிகக் குறைந்த நாட்கள் வேலை செய்யும் நாடு இலங்கை என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக மக்கள் தொகை விகிதத்தின்படி சராசரியாக 250 பேருக்கு ஒரு அரச ஊழியர் அரசப்பணியில் இருக்க வேண்டும். எனினும் இலங்கையில் 13 பேருக்கு ஒரு அரச ஊழியர் உள்ளார். இவ்வளவு பெரிய பொதுச்சேவை உலகில் எங்கும் இல்லை.

வருடத்திற்கு 170 அல்லது 179 நாட்கள் இலங்கையில் வேலை செய்வதைப் பார்த்தேன். இப்படி ஒரு நாடு முன்னேற முடியுமா? இதில் கவனம் செலுத்துங்கள். நாட்டைமுன்னோக்கிகொண்டு செல்ல நாம் உழைக்க வேண்டும்.

நமது நாடு அப்போது மிகவும் பலமான நாடாக, பொருளாதார ரீதியாக மிகவும் வலிமையான நாடாக இருந்தது.

இலங்கையர்களாகிய நாம் திரும்பிப் பார்க்க வேண்டிய நேரம் இது என தெரிவித்தார். (5-6)

# குற்றக்கும்பலை சேர்ந்த 43 பேருக்கு எதிராக சிவப்பு அறிவிப்பு

## நிஹால் தல்துவா



(கொழும்பு)

வெளிநாடுகளில் பதுங்கியுள்ள குற்றக் கும்பலைச் சேர்ந்த 43 பேருக்கு எதிராக சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.


கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவா இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் பதுங்கியுள்ள குற்றக்கும்பல்களில், அடையாளம் காணப்பட்ட மேலும் பலருக்கு எதிராக சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் பெறப்பட்டுள்ளன.

டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள குற்றக்கும்பலைச் சேர்ந்த சந்தேக நபர் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து டுபாய் அரசுடன் ஆலோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (5-6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
1969 - 05 - 06



மறைவு
2024 - 03 - 10

## மயில்வாகனம் மோகநாதன்

**(ஆசிரியர், கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் கல்லூரி, இலங்கை ஆசிரியர் சங்க மத்தியகுழு உறுப்பினர்)**

துன்னாலை வல்லியானந்தம் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் 37 ஆம் வீதி வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மோகநாதன் 10.03.2024 அன்று காலமானார்.

காலஞ்சென்ற மயில்வாகனம் பத்மாவதியின் அன்பு மகனும் கரணவாயைச் சேர்ந்த புஸ்பராஜா மங்க்ளேஸ்வரியின் அன்பு மருமகனும் ரேவதியின் அன்புக் கணவரும் (வர்த்தகத் திணைக்களம் கொழும்பு) அக்ஷயனின்(றோயல் கல்லூரி கொழும்பு) ஆருயிர் தந்தையும் ஆவார். சிவராசா, தவராசா, லோகநாதன், தேவரத்தினம், செல்வராணி, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரேனுகாந், ஷாமினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை (13.03.2024) காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (கீரிப்பல்லிவீதி, கரணவாய் கிழக்கு கரவெட் டியில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவத்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருவம் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரணவாய் கிழக்கு, 021 226 1436, 071 445 6541

தகவல்: குடும்பத்தினர்

(இ-8512)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மண்ணின் மைந்தர் வெற்றிக்கிண்ணம் ஆனந்தபுரம் அண்ணா அணி வெற்றி



உதயசூரியன் விளையாட்டு கழகத்தினால் வருடா வருடம் நடத்தப்படும் மண்ணின் மைந்தர்கள் வெற்றிக் கிண்ணத்தின் ஆரம்ப நிகழ்வானது கடந்த சனிக்கிழமை உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலாவது போட்டியில் போட்டியில் அளம்பில் இளந்தென்றல் அணியும் ஆனந்தபுரம் அண்ணா அணியும் மோதின. ஆட்ட நேர முடிவின் போது 1:0 என்ற கோல் அடிப்படையில் ஆனந்தபுரம் அண்ணா அணி வெற்றி பெற்றிருந்தது.

உதயசூரியன் விளையாட்டு கழகத்தின் தலைவர் தங்கவேல் தனேஷ்குமார் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் தி.ஜெயபாவு, செம்மலை மாணிக்கப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவசிறி கி.கிரிசாந், அளம்பில் புனித அந்தோனியார் ஆலய முன்னாள் பங்குத்தந்தை ஜூட் அமலதாஸ் அடிகளார், உதை பந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாகிகள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (5-6-299)

## சி.எஸ்.கே வீரர்களுடன் தோனி

இந்தியன் பிரீமியர் லீக்- 2024 தொடர் இம்மாதம் 22ஆம் திகதி தொடங்க இருக்கிறது.

இந்த சீசனின் முதல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதவுள்ளன. இதற்காக சென்னை அணி வீரர்கள் சேப்பாக்கம் மைதானத்தில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதனையொட்டி அணியின் கப்டன் மகேந்திரசிங் டோனி சென்னை வந்தடைந்தார்.

இந்நிலையில் தனது சக வீரர்களுடன் கப்டன் டோனி இருக்கும் புகைப்படத்தை சிஎஸ்கே அணி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

இதற்கு முன்னதாக சிஎஸ்கே அணியின் பந்துவீச்சு ஆலோசகர் எரிக் சைமன்சின் பிறந்தநாளை ஒட்டி கேக் வெட்டி கொண்டாடிய வீடியோவை தனது எக்ஸ் பக்கத்தில் சிஎஸ்கே அணி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (5-6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3061

சௌந்தினி




சாந்தி




ரூபன்




கவி




கோபி




நிலக்ஷன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் தரவையை விடுவிக்கக்கோரி கால்நடை பண்ணையாளர்கள்

## மகஜர் கையளிப்பு



(கண்டாவளை)
கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளம், திருவையாறு, இரத்தினபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கால்நடை பண்ணையாளர்கள் தமக்கான மேய்ச்சல் தரவையை விடுவித்து தருமாறு கோரி நேற்று மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு மகஜர்களை கையளித்துள்ளனர்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கனகாம்பிகைக் குளம் பகுதியில் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு காணிகளை தனியார் ஆக்கிரமித்து வருவதனால் தங்களுடைய கால் நடைகளை பராமரிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்

கால்நடைகளை பராமரிக்க கூடிய வகையில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை பெற்று தருமாறு மாவட்ட அரச அதிபர் கரைச்சி பிரதேச செயலரிடமும் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6-315)

# எரிபொருளின் விலையை மேலும் குறைக்க ஆராய்வு

## காஞ்சன விஜேசேகர

(கொழும்பு)
எரிபொருளின் விலையை மேலும் குறைக்கத் தயாராக இருப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், திருத்தப்பட்ட மின்சாரசபை சட்டமூலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


புதிய சட்டமூலம் சட்டதிணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

விலை சூத்திரம் தொடர்பில் பங்குதாரர்களை அழைத்து எரிபொருளின் விலையை மேலும் குறைக்க தயாராக இருக்கிறோம் என அவர் தெரிவித்தார். (5-6)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் 1070 கிலோ 100 கிராம் மஞ்சள் ஏலத் தில் விற்கப்படும் என கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5-6)

# பதவி என்னை நாடி வந்தது பெருமிதம் அடையும் ரணில்



(கொழும்பு)
நாடு நெருக்கடியில் சிக்கித் தவித்த 2022 ஆம் ஆண்டில் பிரதமர் பதவியையோ அல்லது ஜனாதி பதிபதவியையோ பெறும் ஆசை எனக்கு இருக்கவில்லையெனவும் அந்த ஆண்டில் அந்தப் பதவிகள் என்னைத் தேடி வந்தன என்பது தான் உண்மையென ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டிய மாநகர சபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ரணில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து ரணில் மேலும் தெரிவிக்கையில் "நான் அரசைப் பொறுப் பேற்ற போது நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வர முடியும் என நான் எதிர் பார்க்கவில்லை.

ஜனாதிபதி மாளிகை சுற்றிவளைக்கப்பட்டபோது முன்னாள் ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறியதுடன் எனது வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டு இருப்பினும் முன்னாள் ஜனாதிபதி வழங்கிய பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன்.

நான் அரச கட்டடமொன்றில் பதில் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்வதற்கு அரச அதிகாரிகள் அஞ்சினாலும்கூட விகாரையில் நான் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றதுடன் பதவி என்னைத் தேடிவந்தது என அவர் தெரிவித்துள்ளார். (5-6)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)
இம்மாதத்தின் கடந்த ஆறு நாட்களில் மாத்திரம் 40,877 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

அந்தவகையில் ரஷ்யாவில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும், இதுவரை ரஷ்யாவில் இருந்து 50,800 பேரும், இந்தியாவில் இருந்து 5,602 பேரும் ஜேர்மனியில் இருந்து 4,110 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதேசமயம் கடந்த மாதத்தில் மாத்திரம் 218,350 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# இராசிபலன்

12.03.2024
மாசி 29, செவ்வாய்க்கிழமை
துதியை முற்பகல் 11.03 மணிவரை

ரேவதி பின்னிரவு 12.42 மணிவரை
சுபநேரம் -10.52-12.22 மணிவரை
இராகுகாலம்-3.22-4.52 மணிவரை

சந்திராஷ்டமம் - ஆயிலியம், மகம்.

வளவன்


**மேஷம்**
விலை உயர்ந்த பொருட்களை வங்கி மகிழும் வய்ப்புண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


**கடகம்**
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**துலாம்**
கடன்பாக்கிகள் கொடுத்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


**மகரம்**
உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**ரிஷபம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.


**சிம்மம்**
எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும்.


**விருச்சிகம்**
பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


**கும்பம்**
சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், செல்வ நிலை உயரும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


**மிதுனம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், மனநிறைவு கூடும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கௌரவமான அந்தஸ்து உயரும் நாள்.


**கன்னி**
கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு.


**தனுசு**
தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


**மீனம்**
வழிபாடு ஆனந்தம் தரும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

சிந்தனையில்லாமல் முன்னேற்றம் இருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)


யா/வேலணை சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் திறனாய்வு போட்டி நாளை மறுதினம் வியாழக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் அ.சோம சுந்தரம் தவநடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு வேலணை பிரதேச செயலக பிரதேச செயலாளர் கைலாசப்பிள்ளை சிவகரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (5-6)

## வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை பார்வையிட்ட காணி உரிமையாளர்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பகுதியில் கடந்த 33 வருட காலமாக இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த சுமார் 67 ஏக்கர் காணி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்பட்ட நிலையில் காங்கேசன்துறை தெற்கு மற்றும் மயிலிட்டி தெற்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள காணிகளுக்குள் செல்ல இராணுவத்தினர் நேற்று திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளனர்.



காங்கேசன்துறை தெற்கு 235 கிராம சேவையாளர் பிரிவில் 20.3 ஏக்கர் காணிகளும் மயிலிட்டி தெற்கு (தென்மயிலை) 240 கிராம சேவையாளர் பிரிவில் 24 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை விடுவிக்கப்பட்ட காணிகளில் பெரும்பாலான காணிகளில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேறாத நிலையில் இன்னமும் ஓரிரு நாட்களில் காணிகளில் இருந்து தாம் வெளியேறிய பின்னர் உங்கள் காணிகளுக்குள் நீங்கள் வர முடியும் என தம்மை இராணுவத்தினர் திருப்பி அனுப்பியதாக சில காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர். (5-6-33)

## 22 மீனவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 22 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருந்ததோடு குறித்த மீனவர்கள் பயணித்த 3 படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த மீனவர்கள் 22 பேரும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினால் மண்புழு உரம் உற்பத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறையானது நாளை புதன்கிழமை காலை 9.30 மணியளவில் பிரதேச செயலக வளாகத்தினுள் அமைந்துள்ள விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நஞ்சற்ற உணவு உற்பத்திக்கான சேதனப்பசளைப் பாவனையினை ஊக்குவிக்கும் முகமாகவும் முறையான கழிவு முகாமைத்துவத்தினை ஏற்படுத்தும் நோக்கிலும் மற்றும் இத்துறையில் சுயதொழில் முயலுநர்களை உருவாக்கும் நோக்கிலும் இப்பயிற்சிப்பட்டறையானது முன்னெடுக்கப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5-6)



சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் நூல் வெளியீடும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்று இருந்தன.



## வாகன விபத்து பெண் ஒருவர் காயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இராணுவ வாகனம் மோதி வயோதிப பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதில் காயமடைந்த எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த பெண் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-30-33)

# ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் 40 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30 மணி அளவில் மேற்படி பகுதியில் ஹெரோயின் விற்பனை இடம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இளைஞரை சோதனையிட்டபோது மேற்படி நபரின் உடமையில் 40 மில்லி கிராம் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஆவரங்கால் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த 23 வயது உடைய இளைஞர் என பொலிஸார் தெரிவித்தனர். (5-6-60)







யாழ். வண்ணார் பண்ணை சிவா விளையாட்டு கழகத்தினரால் 8 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த கழகத்தில் நடைபெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 | 250 | 235 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 190 | 240 | 190 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 400 | 280 |
| தக்காளி | 350 | 280 | 320 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 200 | 120 |
| கோவா | 350 | 430 | 400 | 400 | 300 |
| கரட் | 400 | 400 | 480 | 500 | 400 |
| பூசணி | 350 | 220 | 200 | 300 | 170 |
| புடோல் | 160 | 180 | 200 | 200 | 100 |
| வாழைக்காய் | 150 | 200 | 180 | 200 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 300 | 250 | 400 | 325 |
| பெரிய வெங்காயம் | 600 | 450 | 580 | 700 | 500 |
| பாகற்காய் | 450 | 350 | 350 | 500 | 400 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 400 | 130 |
| கருணைக் கிழங்கு. | 120 | 100 | 120 | 200 | -- |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 400 | 350 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 400 | 260 |
| பீற்றூட் | 260 | 280 | 300 | 350 | -- |
| கறிமிளகாய் | 400 | 600 | 380 | 400 | 410 |
| முருங்கைக்காய் | 1100 | 900 | 1000 | 1200 | 1240 |
| போஞ்சி | 600 | 250 | 450 | 500 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 200 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 80 | 100 | 50 |
| தேசிக்காய் | 150 | 200 | 180 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 80-120 | 60-120 |
| இராசவள்ளி | 320 | 450 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | 150 | 180 | 200 | 300 | 120 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 150 | 70 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 120 |
| [illegible] | 80 | 150 | 100 | 200 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக்கழக

# 38 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா மார்ச் 14, 15, 16 ஆம் திகதிகளில்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 38 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி எதிர்வரும் 14 ஆம், 15ஆம், 16 ஆம் திகதிகளில் பல்க லைக்கழக உள்ளக விளை யாட்டரங்கில் ஒன்பது அமர்வுகளாக நடைபெறவு ள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விபரிப்பு ஒன்று நேற்று திங்கட்கிழமை காலை துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறி சற்குணராஜா தலைமையில் நடை பெற்றது.

38 ஆவது பட்டமளிப்பு விழாவை யாழ். பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமை தாங்கி பட்டதாரிகளுக்கான பட்டங்களையும் தகைமைச் சான்றிதழ் களையும் தங்கப்ப தக்கங்களையும் புலமைப்பரிசில்களையும் வழங்கிக் கௌரவிப்பார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 441 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும் 2 ஆயிரத்து எட்டு உள்வாரி மாண வர்களுக்கும் 330 வெளிவாரி மாண வர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன் 94 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன.

பட்டமளிப்பு விழாவின் போது 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக் கது. (5-6)

# இடமாற்றத்தைத் தாமதித்தால் போராட்டத்தில் ஈடுபடுவோம்

## கஷ்டப்பிரதேச ஆசிரியர்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் கல்வி அமை ச்சில் கடந்த 2024.01.30 ஆம் திகதி இடம்பெற்ற வருடாந்த இடமாற்றச் சபையில், வெளிமாவட்டங்களிலும் கஷ்டப் பிரதேசங்களிலும் 7 வருடங்கள் சேவைக்காலத்தை நிறைவு செய்த ஆசிரி யர்களை 2024.02.19 முதல் அவர்க ளின் சொந்த மாவட்டங்களில் கடமையாற் றுவதற்கு வசதியாக இடமாற்றம் வழங்கு வதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும் இதுவரை குறித்த இட மாற்றங்கள் வழங்கப்படாமல் இருப்பது கவலையளிப்பதாகவும் இதனை துரித ப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் வெளி மாவட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

நாட்டின் ஏனைய மாகாணங்களில் குறித்த திகதிகளில் இடமாற்றங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்பட்ட போதி லும் வடமாகாணத்தில் இந்த இடமாற்றம் சரியான முறையில் முன்னெடுக்கப் படவில்லை.

எமக்கான தீர்வினை பெற்றுத் தருவத ற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இல்லை எனில் தொடர் போராட்டங்களில் தாம் ஈடுபடப் போவ தாகவும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தெரி வித்துள்ளனர். (5-6)

# அஸ்வெசும கொடுப்பனவுகள் ஜூன் மாதம் முதல்-சேமசிங்க

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான இரண்டாம் கட்டத்துக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான இரண்டாம் கட்ட த்துக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கால அவகாசம் இந்தமாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது

தற்போது சுமார் 2 மில்லியன் பயனாளிகள் அஸ்வெசும கொடுப்பனவுக்கு தகுதிபெற்றுள்ளனர். இரண்டாவது கட்டத்தின் கீழ் அந்த எண்ணிக்கையை 2.4 மில்லியனாக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக இந்த ஆண்டுக்கான பாதீட்டில் 205 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (5-6)

## டிக்டொக் பின்னடைவு இன்ஸ்டாகிராம் முதலிடம்

(கொழும்பு)

உலகளவில் கடந்த ஆண்டு அதிகமாக பதிவிறக்கம் செய்யப்பட்ட செயலிகளில் டிக்டொக்கை பின்னுக்கு தள்ளி இன்ஸ்டாகிராம் முதலிடம் பிடித்துள்ளதாக சந்தை நுண்ணறிவு நிறுவனமான சென்சார் டவர் தகவல் வெளியிட்டுள்ளது.

அதன்படி இன்ஸ்டாகிராம் பதிவிறக்கம் 2023 இல் 20 சதவீதம் அதிகரித்துள்ளதோடு மொத்தமாக 767 மில்லியன் முறை இந்த செயலி பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளதாக சென்சார் டவர் குறிப்பிட்டுள்ளது. இதன்மூலம், உலகிலேயே அதிகம் பதிவிறக்கம் செய்யப்பட்ட செயலி என்ற பெருமையை "இன்ஸ்டா கிராம்" பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு :1992 - இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 20
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்: A/L (TO)
எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம்
தொ.இ: B/13374

பிறப்பு:1989 -இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 21
உயரம் :5' 4"
தகைமை/தொழில்- பட்டதாரி. (DO)
எதிர்பார்ப்பு: அரச/ தனியார் தொழில்
தொ.இ: B/14109

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அனுஷம்
கி.பா: 59
உயரம்:6'
தகைமை/ தொழில்: QS, Senior Cost Engineer
எதிர்பார்ப்பு: BSC படித்த பெண்
தொ.இ: B/14112

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம் : பூராடம்
கி.பா: -
உயரம்: 5' 7"
தகைமை/தொழில்:- பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14114

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1991 - RC
நட்சத்திரம்: பூராடம்
கி.பா:-
உயரம்: 157cm
தகைமை/தொழில்: MSC, BSC(Software Engineer), QA
எதிர்பார்ப்பு: Engineer, Doctor, IT,Degreeholder
தொ.இ: G/14163

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: -
உயரம்: 162cm
தகைமை/தொழில்: MBBS (Doctor)
எதிர்பார்ப்பு: சைவபோசனம், பொறியியலாளர்
தொ.இ: G/14178

பிறப்பு -1995 - இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: - 43 1/4
உயரம் :5' 1"
தகைமை/தொழில்: BBA (விரிவுரையாளர்)
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/14184

பிறப்பு -1996 - இந்து
நட்சத்திரம் - பரணி
கி.பா:-
உயரம்: 153 cm
தகைமை/தொழில்: B.Pharm(Hons)
எதிர்பார்ப்பு : மருத்துவத்துறை, வெளிநாடு
தொ.இ: G/14194

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# சேவைநலன் பாராட்டு, மணிவிழா வாழ்த்து



## திருமதி. செந்திரு சிவஜோதி

(SLTS-I பிரதி அதிபர்)

**சேவை விபரம்**

சேவை முன் பயிற்சி : 17.08.1988-06.09.1988
யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை: 21.10.1988-05.02.1991
ஆசிரியர் பயிற்சி கலாசாலை: 06.02.1991-31.12.1992
யா/வல்வை சிதம்பரக் கல்லூரி: 01.01.1993-31.06.1993
யா/செம்பியன்பற்று அ.த.க பாடசாலை: 01.07.1993-31.12.1997
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி: 01.01.1998-09.05.2010
யா/புற்றளை மகா வித்தியாலயம்: 10.05.2010-12.03.2013
யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்: 13.03.2013-12.03.2024

இறைசேவையாம் ஆசிரிய சேவை தன்னில்
இன்முகத்துடன் முப்பத்தைந்தாண்டுகள்
பணிபுரிந்த விஞ்ஞான வித்தகியே
உங்கள் பண்பான சேவை எங்கள் பள்ளியிலே
பசுமையாய் பதினோராண்டுகள் உங்கள் பணியில்
சகல துறைகளிலும் எம் மாணவரை மிளிர வைத்த
சாந்த சொரூபியே உங்களது ஓய்வுக்காலம் சிறக்க
இன்னல்கள் போக்கும் இறைவனை வேண்டி
இந்நாளில் வாழ்த்துகின்றோம்
மணிவிழா நாயகியே வாழி பல்லாண்டு

Best Wishes

(034)

வாழ்த்துவோர்:-அதிபர், ஆசிரியர், பணியாளர் நலன்புரிச்சங்கம், யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாரதம்

# வறண்டு போகும் பனாமாக்கால்வ
# நெருக்கடியில் உலக வர்த்த

## அதிகாரபூர்வ நீரியல் நிபுணர்

**பனாமா கால்வாயின் நீர்மட்டம் குறைந்து வருவது உலக பொருளாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியிருப்பதாக அதிகாரபூர்வ நீரியல் நிபுணரான நெல்சன் குவேரா தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக பனாமா கால்வாயின் அதிகாரபூர்வ நீரியல் நிபுணரான நெல சன் குவேரா மேலும் தெரி விக்கையில்.

"ஒவ்வொரு ஆண்டும் கோடை காலங்களில் கால் வாயின் நீர்மட்டம் குறை வது இயல்பு. என்றாலும் இன்னும் கோடை காலம் கூட ஆரம்பிக்காத நிலை யில் இப்போதே ஒரு காடளவிற்கான மரங்கள் நீர் மட்டத்துக்கு மேலே தென் படுகின்றன.

மேலும் காதுன் ஏரியின் நீர் மட்டம் 5 அடி குறைந்தி ருக்கிறது. கால்வாயின் 110 வருட வரலாற்றில் இரண டாவது முறையாக குறைந்த மழையும் வானிலையும் இந்த வறட்சிக்குக் கார ணமாக அமைந்திருக்கின றன.

கடந்த வருடம் ஒக்டோ பர் மாதம்தான் முதன் முறை யாக கால்வாய் வறண்டது.

அதனைத் தொடர்ந்து தற்போது இயல்பைவிட 41 சதவிகிதம் குறைவாக மழைபொழி ந்திருக்கிறது. இதனால் அமெரிக்க- பசுபிக் வழித்தடத்தில் 270 பில் லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தகத்து க்கு சிக்கல் ஏற்பட்டிருக்கி றது.

அதுமாத்திரமன்றி தற போது ஒரு நாளைக்கு கால் வாயைக் கடக்கும் கப்பல் களின் எண்ணிக்கை 36 இலிருந்து 24ஆக குறைக் கப்பட்டிருக்கிறது.

மேலும் ஒவ்வொரு கப்ப லும் குறைந்தளவு சரக்கு களையே கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது.

இது உலக வர்த்தகத்தில் பெரும் சிக்கலாக மாறியிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் பனாமா கால்வாய் நிர்வாகம்தான் அந்த நாட்டின் பாதிமக்கள் தொகைக்கு குடிநீர் விநியோகம் செய்து வருகிறது. எனவே இதனால், அந்தப் பகுதி மக்களுக்கு இந்த வறட்சி தொடர் தண்ணீர் சிக் கலை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்

டுள பெ வி வற வா கள பா க்ன கிற

## சிறுவர்களின் உயிர்காக்கும் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த கனேடிய மருத்துவர்கள்

(மொன்றியல்)

சிறுவர்களின் உயிர் களை காக்கும் வகையி லான அரிய கண்டு பிடிப்பு ஒன்றை கனடாவின் மொன் றியல் மருத்துவர்கள் அறி முகம் செய்துள்ளனர்.



விபத்துக்கள் மூலமாக ஆண்டு தோறும் சுமார் ஒரு மில்லியன் சிறுவர்கள் உலகம் முழுவதிலும் உயி ரிழப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள் ளது.

இந்த நிலையில் விபத் துக்களினால் ஏற்படக்கூடிய மரணங்களை வரையறுக் கும் நோக்கில் கனேடிய மருத்துவர்கள் புதிய தொழில் நுட்பம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளனர்.

மெய்நிகர் அவசர சிகிச் சைப் பிரிவு தொழில்நுட்பம் ஒன்றை மொன்றியல் மருத் துவர்கள் கண்டு பிடித்து சாதனை படைத்துள்ளனர்.

இந்த தொழில்நுட்பத்தை மருத்துவர்களுக்கு பயிற்று விப்பதன் மூலம் பெரும் எண்ணிக்கையிலான உயிர் களைக் காக்க முடியும் என மருத்துவ ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ள னர்.

ஆண்டு தோறும் வாகன விபத்துக்கள், விழுதல், தீ விபத்துக்கள் உள்ளிட்ட விபத் துக்கள் மூலம் பெருமளவு சிறுவர்களின் உயிர்கள் காவுகொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

PeTIT VR என்ற இந்த மெய்நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாக தொலை தூரத்தில் இருந்து கொண்டு விபத்துக்களினால் காயமடைந்தவர்களுக்கு சிகி ச்சை அளிக்கப்பட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மருத்துவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மருத்துவ உதவியாளர்கள் சிகிச் சைகளை வழங்க முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (5-6)

## காசாவை தொடர்ந்து லெ
## தாக்குதலை நடத்தும்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் - காசாவை தொடர்ந்து லெபனான் நாட் டின் மீது இஸ்ரேல் தாக்கு தலை தொடங்கி உள ளது.



இதனால் தற்போது யுத்தம் உச்சக்கட் டத்தை எட்டியுள்ள நிலையில் லெப னான் மீதான தாக் குதலின் பின்னணி குறித்த தகவல் வெளி யாகி உள்ளது.

4 ஆவது லெபனா னுடன் இஸ்ரேல் யுத் தம் நடத்தி வருகி றது.

இதற்கு முக் கிய காரணம் பாலஸ்தீ னத்தின் காசா பகுதி யாகும்.

இந்த இடம் தற் போது ஹமாஸ் அமை ப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்த இடத்தை கைப்பற்ற இஸ்ரேல் முயற்சிக்கிறது.

இதுதொடர்பாக இருதரப்புக் கும் இடையே மோதல் நடந்து வருகிறது.

ாள ரே கள இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

## ல்வாய் தகம்!



டுள்ளது. உலகில் இரண்டாவது பெரிய கடல், வர்த்தக மார்க்கமாக விளங்கும் பனாமா கால்வாய் வறண்டு போகும் நிலை உருவாகியிருப்பதாக, ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு சமீபத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. (5-6)

## லெபனான்மீது தும் இஸ்ரேல்



கடந்த சனிக்கிழமை ஹமாஸ் தீவிரவாத அமைப்பு இஸ்ரேல் மீது 5 ஆயிரம் ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியது. இதற்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது. (5-6)

# மாலைதீவு-துருக்கி இடையே ஆயுத ஒப்பந்தம் கைச்சாத்து


(மாலே)

இந்தியாவுடனான உறவை முறித்துக் கொண்டுள்ள மாலைதீவு தற்போது துருக்கியுடன் ஆயுத ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளது.

அதன்போது துருக்கியிடமிருந்து மாலைதீவு ட்ரோன்களை வாங்கியுள்ளதாகவும் அவற்றை இயக்குவதற்கு ட்ரோன் தளமொன்றை நிறுவ முயற்சிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இந்தியாவுக்கும் துருக்கிக்கும் இடையே கடந்த 1948ஆம் ஆண்டிலிருந்து உறவு இருந்து வந்தாலும், பெரும்பான்மையான விடயங்களில் இந்தியா துருக்கியிடமிருந்து முரண்பட்டு வருவதாக கூறப்படுகிறது. துருக்கி பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்ற நிலையில் இந்தியாவிற்கு அதில் உடன்பாடு இல்லை.

அதேவேளை அணு சக்தி விநியோக நாடுகள் என்ற குழுவொன்றுக்குள் இந்தியா நுழைவதற்கு துருக்கி எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்த நிலையில் இந்தியாவுக்கும் துருக்கிக்கும் இடையேயான உறவு



நிலையற்றதாக சென்று கொண்டிருக்கின்றது.

அதன் அடிப்படையில் தற்போது இந்தியாவுடனான நட்பைக் கைவிட்டுள்ள மாலைதீவு இந்தியாவை எரிச்சலடைய வைக்கும் வகையில் துருக்கியுடன் ஆயுத ஒப்பந்தமொன்றினை முன்னெடுத்துள்ளது. (5-6)

# உலக பணக்காரர் பட்டியலில் 3 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்ட மஸ்க்

(வோஷிங்டன்)

அமெரிக்காவைச் சேர்ந்த உலகின் முன்னணி கோடீஸ்வரரும் பிரபல தொழிலதிபருமான எலான் மஸ்க் உலக பணக்காரர்கள் வரிசையில் தற்போது 3 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

2022 ஒக்டோபர் மாதம் அமெரிக்காவை மையமாகக் கொண்ட பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டர் நிறுவனத்தை எலான் மஸ்க் $44 பில்லியனுக்கு விலைக்கு வாங்கினார். அதன் பெயரை டுவிட்டர் என்பதிலிருந்து எக்ஸ் என மாற்றி வருவாயை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கை



கள் எடுத்து வருகிறார்.

ஆனால் மஸ்க் எடுத்து வரும் நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

இந்நிலையில் எலான் மஸ்கின் நிகர மதிப்பு $189 எனும் அளவில் உள்ளது. இதன் மூலம் உலக பணக்காரர்கள் வரிசையில் 3 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

டெஸ்லாவின் பங்குச் சந்தை மதிப்பு கடந்த ஒரு வருடமாக சரியத்தொடங்கி இதுவரை 29 சதவீதம் விழுந்துள்ளது. டெஸ்லாவில் எலான் மஸ்க் வைத்திருக்கும் 21 சதவீதப் பங்குகள்தான் அவரது வருவாயில் பெரும் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் இடத்தில் பிரான்ஸ் நாட்டின் ஃபேஷன் ஆடைகள் தயாரிப்பு நிறுவனமான லூயி வியுட்டன் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி பெர்னார்ட் அர்னால்ட் மற்றும் இரண்டாம் இடத்தில் அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் ஆகியோர் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# வெள்ளத்தில் சிக்கி 19 பேர் உயிரிழப்பு

## இந்தோனேசியாவில் சோகம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் சுமத்திரா தீவில் ஏற்பட்ட வெள்ளத் தில் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஏழு பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ரா மாகாணத்தில் தொடர் மழை காரணமாக நிலச்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் மின் தடை ஏற்பட்டுள்ளதாகவும் வீதிகளில் மழைநீர் நிரம்பியுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை 8,000 இற்க்கும் அதிகமான மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் அறிவிப்பு வெளியானதுடன் ரணில் தனித்து விடப்படுவார்



(கொழும்பு)

"ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப் பட்டவுடன் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தனித்துவிடப்படுவார்" என முன்னாள் பாராளுமன்ற உறு ப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளருமான அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

பண்டாரகம பகுதியில் நடை பெற்ற மக்கள் சக்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில் "ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் தொழிற் துறையை இல்லா மல் செய்துள்ளதோடு வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்களுக்கு வாழ முடியாத நிலைமையை ஏற் படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் தேர்தல் ஒன்று இடம்பெற்றால் ரணிலுடன் யாரும் இருக்க மாட்டார்கள் எனத் தெரி வித்தார். (5-6)

# யுக்திய கைது நடவடிக்கையில் களமிறக்கப்பட்ட இராணுவம்

## நிஹால் தல்துவ

(கொழும்பு)

யுக்திய சுற்றிவளைப்பு நடவடி க்கைகளுக்காக நேற்று முதல் இரா ணுவத்தினரின் ஒத்துழைப்பை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரி வித்துள்ளார்.

யுக்திய சுற்றிவளைப்பு நடவடி க்கைகளுக்கு ஆளணி பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவித்திருந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

இதன்படி நாடாளாவிய ரீதியில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தல் மற்றும் பாதாளகுழு செயற்பாட்டை இல்லாதொழித்தல் நடவடிக்கையினை மேற்கொள்வதற் காக நேற்று முதல் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது.

யுக்திய சுற்றிவளைப்பு நடவடி க்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப் படும் என பொலிஸ் மா அதிபர் தேஷ பந்து தென்னக்கோன் தெரிவித்திரு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# தாய்லாந்து- இலங்கை ஒப்பந்தம் பொருளாதாரத்தை மேம்படுத்தும்

(கொழும்பு)

தாய்லாந்துடன் மேற்கொள் ளப்பட்ட சுதந்திர வர்த்தக உடன் படிக்கையானது இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என சீன ஊடகமொன்று தெரிவித் துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் சிக் கியுள்ள இலங்கை நீண்டகால திட்டங்களை மேம்படுத்துவதற்கும் அதன் வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் அதன் பொரு ளாதாரத்தை வலுப்படுத்துவதற் கும் உதவும் எனகுறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் தாய்லாந்தின் பிரதமருக்கும் இடையே கைச்சா த்தான இந்த ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் உள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 15 வருட காலபகுதியினுள் உடனடி மற்றும் படிப்படியாக கட்டண சலுகைகளை வழங்குகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து தாய்லா ந்திற்கு மொத்தமாக 57.76 மில் லியன் அமெரிக்க டொலர் பெறுமதி யான பொருட்கள் ஏற்றுமதி செய்யப் பட்டதோடு தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கு 302.64 அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# உலக மனநிலை அறிக்கையில் இலங்கைக்கு இரண்டாம் இடம்

(கொழும்பு)

உலக மனநிலை அறிக்கை யின்படி உலகின் மிகக் குறை வான மன உளைச்சலுக்குள் ளான மக்களை கொண்ட நாடு களில் முன்னணி இடத்தை இல ங்கை பிடித்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

அதன்படி சபியன் லப்ஸ் 2023 ஆம் ஆண்டுக்கான உலக மனநிலை அறிக்கையை வெளி யிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் 89 மதிப் பெண்களுடன் மனநலக் கோட்ட த்தில் இலங்கை உலகின் 2 ஆவது மிக உயர்ந்த தரவரி சையினைப் பெற்றுள்ளது.

இந்தப் பட்டியலில் டொமி னிகன் குடியரசு முன்னணியில் உள்ள அதேவேளை டான் சானியா, பனாமா, மலேசியா ஆகிய நாடுகளுடன் இலங்கை யும் அடங்கலாக முதல் ஐந்து இடங்களைப் பிடித்துள்ளது.

இலங்கையின் சனத்தொகை யில் 14 வீதமானோர் மட்டுமே உலகளவில் மிகக் குறைவான மன உளைச்சலுக்கு ஆளாவ தாக அந்த அறிக்கையில் குறி ப்பிடப்பட்டுள்ளது. (5-6)

# இன்று ஒரு தகவல் 62



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஒட்டும் மருத்துவம்

நமது உடம்பு இருக்கு....

அது நடமாடும் கோயில் என்று சொல்லுவார்கள். அதனாலே கோயிலை எப்படி வைத்திருக்கணுமோ அப்படி வைத்திருக்கனும். நமது உடம்பையும் எப்படி வைத்திருக்கிறோம் என்பது வேற விடயம். உடம்பு சுத்தமாக இருக்க வேண்டும் மனமும் சுத்தமாக இருக்க வேண்டும். அப்படி இருந்து விட்டால் போதும்.அதை விட பெரிது வேறெதுவும் இல்லை.

நோயில்லாத வாழ்வுதான் குறைவில்லாத செல்வம். ஆனால் அப்படி யார் இருக்கிறார்கள்? இப்போது இருக்கிறவர்களை மூன்று விதமாகப் பிரிக்க லாம். ஆகாரத்திற்கு முன்னாடி மருந்து சாப்பிடுபவர் கள் உண்டு. ஆகாரத் திற்கு பின்னாடி மருந்து சாப்பிடுறவர்கள் உண்டு.

மருந்தையே ஆகாரமாக சாப்பிடுறவங்களும் உண்டு. நோயே வராத அளவுக்கு இருந்து விட்டால் நல்லது. நோய் வந்து விட்டால் அதுக்குப்பிறகு மருந்து மாத்திரை எதையாவது உடம் புக்குள்ளே அனுப்பி நோயை வெளியே அனுப்ப வேண்டியிரு க்கிறது.

உடம்பிற்குள்ளே மருந்தை அனுப்புவது எப்படி? ஒரு முறை வாய் வழியாக சாப்பிடுவது இன்னொரு முறை ஊசி மூலமாக உடம்பிலே செலுத்துவது. இப்போது இன்னொரு சுலபமான முறை வந்திருக்கிறது. அதற்கு TCDD என்று பெயர். அதாவது "Transdermal Controlled Drug Delivery System" Polymer களால் தயாரிக்கப்பட்ட ஒரு சாதாரண பிளாஸ்டர் மாதிரி இது.

இதில் நமது உடம்பிற்குள் போக வேண்டிய மருந்தையும் சேர்த்து இருப்பார்கள். இப்போது உடம்பிலே ஏதாவது காயம் ஏற்பட்டால் பிளாஸ்திரியை ஒட்டுகிறோம் அல்லவா. அதே மாதிரி இதையும் உடம்பிலே ஒட்டிக்கொள்ள வேண்டியது தான். இதிலே இருக்கிற மருந்து தோல் வழியாக உள்ளே போய்விடும்.

இதில் சில சௌகரியம் உண்டு. எப்படி என்றால். ஊசி போட்டால் வலிக்கிறது. மாத்திரை சாப்பிட்டால் வயிற்றிலே சில தொந்தரவு எல்லாம் கொடுக் கிறது. அதிகமாக சாப்பிட வேண்டியிருக்கிறது.

அது மட்டுமில்லை வயிற்றிலே அமிலத்தன்மை இருக்கிறதாலே சில மருந்தோட வீரியம் ஓரளவுக்கு பாதிக்கப்படும். ஆனால் இந்த TCDD முறையிலே அந்த கஷ்டம் கிடையாது. இதை விட பெரிய சௌகரியங்கள் உண்டு.

சாதாரணமாக நாம் சாப்பிடுகிற மருந்து ஆரம்பத்திலே கொஞ்சம் கல்லீரலுக்கு ள்ளே சென்று கழிவுப்பொருளாக விரயமாகும். இதை Initial by Pass by the liver என்று சொல்லுவார்கள்.

ஆனால் Transdermal Patch வழியாக உள்ளே போகும் மருந்து நேராக இரத்தத்திலே கலந்துவிடு கிறது. அதனாலே மருந்தின் அளவையும் குறைக்கலாம். இன்னொரு நன்மை என்னவென்றால் ஒரு நாளைக்கு ஒரு தடவை ஒட்டிக்கொண டால் போதும் தினம் எத்தனை வேளை? ஆகாரத்திற்கு முன்பா? பின்பா? அப்படியெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

ஏனென்றால் Polymer இலே சேர்க்கப்பட்ட மருந்து கொஞ்சம் கொஞ்சமாக தேவையான அளவிற்கு உடம்பிற்கு ள்ளே போய்விடும்.

ஒரு இதய நோயாளிக்கு மாரடைப்பு வரும் என்று டொக்டர்கள் சந்தேகப் படுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள் Nitroglyce rine சேர்ந்த Transdermal பிளாஸ்ரரை ஒட்டிக்கொண்டால் போதும் இரவு நேரத்தில் நிம்மதியா கத் தூங்கலாம்.

இது ஒரு முன்ஜாக்கிரதையான தடுப்பு முறை இதுமாதிரி Scopolamine transdermal Patches எல்லாம் இருக்கு. இன்னும் கொஞ்சக்காலத்தில் எத்தனையோ விதமான மருந்துகளை உடம்பிலே செலுத்துவதற்கு இந்த முறை உபயோகமாக இருக்கும். ஏனென்றால் ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கிற தோலோட பரப்பும் மூவாயிரம் சது அங்குலம். மூன்றில் ஒரு பங்கு இரத்தம் இங்கே தான் சுற்றிக்கொண்டிருக்கும். அதனால் இன்னும் கொஞ்ச நாட்களிலே யாராவது ஒருத்தர் உடம்பிலே பிளாஸ்ரி ஒட்டிக்கொண்டு வந்தால் அவர்கள் எங்கேயோ அடிபட்டு வருகிறார்கள் என்று மட்டும் நினைத் துக் கொள்ள வேண்டாம். அவர்கள் மருத்துவமனையிலே இருந்து வருகிறவர்களாகவும் இருக்கலாம்.

தோல்வழியாக மருந்து செலுத்துவது பற்றி இப்பொழுது பேசிக் கொண்டிருந் தோம். இல்லையா? தோல் மூலமாக காய்ச்சலைத் நேரடியாகத் தெரிந்து கொள்வதற்கு இப்ப வசதியாக இருக்கிறது. சாதாரணமாக காய்ச்சல் என்று சொல்லிக்கொண்டு மருத்துவமனைக்குப் போனோம் என்றால் நமது உடம்புக்கு என்ன என்று சொல்லுவதற்கு வாயைத் திறப்போம் திறந்த வாயை மூடுவதற்குள்ளே அதுலே ஒருவர் ஒரு தேமாமீற்றரைக் கொண்டு வந்து வைத்து விட்டு போய்விடுவார்.

சில பேர் பழக்கதோஷத்தினால் ஏதோ உண்பதற்காகத்தான் கொடுக்கிறார் என்று நினைத்துவிட்டு வாயை அசைபோட ஆரம்பிக்கிறதும் உண்டு. இனிமேல் இந்தப் பிரச்சினை இருக்காது. ஏன் என்றால் Fore Head Thermometere வந்து விட்டது. I M G fever meter என்று இதுக்கு பெயர்.

liquid Crystals அடிப்படையிலே இதை உருவாக்கி இருக்கிறார் கள். இது ஒரு மிக உயர்ந்த தொழில் நுணுக்கம். தேமாமீற்றர் கூட ஒரு சின்ன பட்டை இருக்கும். இந்த Stripe நெத்தியிலே ஒட்ட வைத்து விட வேண்டியது.கொஞ்ச நேரத்திலேயே எத்தனை டிகிரி காய்ச்சல் என்பதை கிரிஸ்டல் இல் நேரடியாக படித்து விடலாம்.

இப்படி மருத்துவம் வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது. இருந்தா லும் மருத்துவத்தின் தேவைப்படாத அளவுக்கு நமது உடலையும் மனதையும் வைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் அது தான் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை விடுவிக்கக்கோரி
## கேப்பாப்பிலவு மக்களால் மகஜர் கையளிப்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக்கோரி நேற்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

மாவட்டச் செயலகத்திற்கு சென்ற குறித்த மக்கள் மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் ஜனாதிபதி மற்றும் அரசாங்க அதிபருக்கான மகஜரினையும் கையளித்துள்ளனர்.

பல வருடகாலமாக தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



கேப்பாப்பிலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் பாடசாலை, வைத்தியசாலை, தேவாலயம் உள்ளிட்ட முக்கிய மக்களின் குடியிருப்புக்கள் இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6-299)

# மதுபான விற்பனை நிலையத்தால் மக்கள் அசௌகரியம்

(முறிகண்டி)

யாழ். பூநகரியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையங்களால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக பூநகரி மருத்துவமனைப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது பூநகரி மருத்துவமனையிருந்து 400 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் ஒரு மதுபானசாலை அமைந்துள்ளது. இம்மதுபான சாலை காரணமாக அப்பகுதியில் பல்வேறு அநாகரிக செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

மதுபான பாவனையின் பின்னர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோர் ஊழியர்களுடன் தேவையற்றதும், அநாவசியமானதுமான வார்த்தைப்பிரயோகங்களில் ஈடுபடுவதோடு மதுபானரின்கள் மருத்துவமனை வளாகங்களிற்குள் வீசப்படுவதால் நோயாளர்கள் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

மதியம் 2 மணி முதல் நள்ளிரவு 1 மணிவரை மருந்து கட்டுவதற்காக வருகை தருபவர்கள் அதிகமாக உள்ளனர். நோயாளர் காவு வண்டிகள் பழுதடைந்த காலங்களில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றுவதில் பல்வேறு சிரமங்கள் காணப்படுகின்றன. எனவே இது குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6-100)

# கேரள கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவில் கஞ்சாவுடன் பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டுவாகல் பாலத்திற்கு அருகில் இராணுவத்தினர், விஷேட அதிரடி படையினர், பொலிஸார்இணைந்து நேற்றுக் காலை மன்னாரிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த தனியார் பேருந்தினை வழிமறித்து சோதனையை மேற்கொண்ட போது குறித்த பெண்ணிடமிருந்த கைப்பையில் 500 கிராம் கேரளா கஞ்சாவினை வைத்து கடத்திசெல்முற்பட்ட சமயத்தில் ஆனை யிறவு தாழையடிப்பகுதியை சேர்ந்த 27வயதுடையபெண்ணை கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர்.(5-6-299)

# விபத்துக்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தபால் நிலையச் சந்தி ஏ-9 வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சிறு காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

மோட்டார்சைக்கிளுடன் கார் மோதியதில் மேற்படி விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிள் பகுதியளவில் சேதமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சிறு காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-30)


............

(கரணவாய்)

பொலிஸ் வாகனம் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் சென்ற இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7. மணியளவில் பருத்தித்துறை முதலாம் கட்டை சந்தியில் இடம்பெற்ற சம்பவத்தில் கற்கோவளம், பருத்தித்துறையைச் சேர்ந்த 24 வயதுடைய துரைரட்ணம் துவாரகன் என்ற படு காயங்களுக்குள்ளான இளைஞன் பொலிஸாரால் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (5-6-60)

# மரக்கடத்தல் முறியடிப்பு ஒருவர் கைது



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பகுதியில் சட்டவிரோதமாக தேக்கு மரகுற்றிகளை கடத்த முற்பட்டவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற கடத்தல் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் பட்டாரக வாகனத்தில் தேக்கு மரகுற்றிகளை கடத்துவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் செஞ்சோலை பகுதியில் வைத்து தேக்கு மரக்குற்றிகளை கடத்த பயன்படுத்தப்பட்ட பட்டாரக வாகனத்தினையும் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

13 தேக்கு மர குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் அவற்றை முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (5-6-299)

# அரசியல் கைதி ஒருவரை ரிஐடி விசாரணைக்கு அழைப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் வசிக்கும் முன்னாள் அரசியல் கைதியும் போராளிகள் நலன்புரிச் சங்கத் தலைவருமான செ.அரவிந்தன் என்பவரை கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கான கடிதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் குறித்த அரசியல் கைதியின் வீட்டிற்கு சென்று நேற்று வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியும் போராளிகள் நலன்புரிச்சங்கத் தலைவருமான செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்) இன்று காலை 9 மணிக்கு கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு வாக்கு மூலம் பெற வருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது. (5-6-250)

# சதோச மனித புதைகுழி வழக்கு மே மாதம் ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னார் சதோச மனித புதைகுழி வழக்கானது நேற்று திங்கட்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் பேராசிரியர் ராஜ் சோம தேவ், SOCO பொலிஸார் உட்பட அனைத்து தரப்பினரினதும் அறிக்கைகள் பெற நடவடிக்கை எடுக்கபட வேண்டும் என்பதுடன் சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ஷ அடுத்த தவணையில் நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜராகும் படி கட்டளை விதிக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு விசாரணையை மீண்டும் மே மாதம் 13 ஆம் திகதி அழைப்பதற்காக திகதியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (5-6-285)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது

(கரணவாய்)

தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை காலை 6.15 மணியளவில் வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் சுருக்கு வலை பாவிக்கப்படுவதாக கிடைக்கப்பெற்றதாக வலை அடுத்து அங்கு சென்ற கடற்படையினர் சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரண்டு இளைஞர்களை கைது செய்துள்ளனர். (5-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 428





பார்த்திபேந்திர பல்லவன் சிறிது திடுக்கிட்டுப் போனான். கொஞ்சம் தயக்கத்துடனே கூறினான் "திரிகோண மலையில் அவர்களை நான் சந்தித்தேன். இளவரசர் இருக்குமிடத்தை எனக்குக் காட்டுவதாக அவர்கள் அழைத்து வந்தார்கள். அநுராதபுரத்தில் திடீரென்று மறைந்து விட்டார்கள். எதற்காகக் கேட்கிறாய் வைஷ்ணவனே! அவர்களைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?"

"தெரியும்! சோழ குலத்தை அடியோடு ஒழித்து விடச் சபதம் செய்திருப்பவர்களில் அவர்கள் இருவர் என்று எனக்குத் தெரியும். நேற்று அநுராதபுரத்தில் அவர்கள்தான் இளவரசரை கொல்லப் பார்த்தார்கள் என்று ஊகிக்கிறேன். ஆகா! அதோ பாருங்கள்" என்று ஆழ்வார்க்கடியான் சுட்டிக்காட்டினான்.

அவன் சுட்டிக்காட்டிய இடம் அம்மண்டபத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்தது. நெருங்கிப் படர்ந்திருந்த மரங்களுக்கு இடையில் ஒரு அழகிய யுவதியும், யௌவன வாலிபனும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்தியத்தேவனும் பூங்குழலியுந்தான் என்பது ஊகிக்கக் கூடியதாயிருந்தது. பேசிக் கொண்டேயிருந்த வந்தியத்தேவன் சட்டென்று ஒரு சிறிய கத்தியை சுழற்றி வீசி எறிந்தான். கத்தி ஒரு புதரில் போய் விழுந்தது. 'வீல்' என்று ஒரு குரல் கேட்டது.

### நாற்பத்திரெண்டாம் அத்தியாயம்
### பூங்குழலியின் கத்தி

பாழடைந்த மண்டபத்திலிருந்து பூங்குழலியைத் தேடிக் கொண்டு சென்ற வந்தியத்தேவன், அவள் ஒரு மரத்தின் மேல் சாய்ந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டான். இலேசான விம்மல் அவளிடமிருந்து வந்து கொண்டிருந்தது.

குரலை மிகவும் நயப்படுத்திக் கொண்டு, "பூங்குழலி!" என்றான்.

சத்தம் கேட்ட பூங்குழலி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"நீ தானா?" என்று சொல்லி மறுபடியும் திரும்பிக் கொண்டாள்.

"நான்தான்! என்பேரில் உனக்கு என்ன கோபம்?"

"உன் பேரில் எனக்கு எந்த விதக் கோபமும் இல்லை."

"பின்னே ஏன் உனக்கு இவ்வளவு சிடுசிடுப்பு?"

"எனக்கு ஆண் பிள்ளைகளைக் கண்டாலே பிடிக்கவில்லை."

"இளவரசரைக் கூடவா?"

பூங்குழலி திரும்பிக் கண்களில் கனல் எழும்படி வந்தியத்தேவனைப் பார்த்தாள்.

"ஆமாம் அவரைத்தான் முக்கியமாகப் பிடிக்கவில்லை!" என்றாள்.

"அப்படி அவர் என்ன குற்றத்தைச் செய்துவிட்டார்?"

"என்னை அவருக்கு ஞாபகமேயில்லை. என்னை அவர் முகமெடுத்துக் கூடப் பார்க்கவில்லை."

"உன்னை அவருக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது. நான் உன்னைப் பற்றிக் கூறியதும், 'ஓ! சமுத்திரகுமாரியை எனக்குத் தெரியாதா?' என்றார்.

"பொய் சொல்லுகிறாய்."

"நீயே நேரில் வந்து கேட்டுக்கொள்."

"என்னை நினைவிருந்தால், ஏன் என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை?"

"அவர் பேசினார் நீதான் மறுமொழி சொல்லாமல் ஓடி வந்துவிட்டாய்."

"அந்தமாதிரி பேச்சை நான் சொல்லவில்லை. தெரிந்தவர்களைப் பார்த்தால், 'என்ன? ஏது?' என்று விசாரிப்பது கிடையாதா? நீ சொல்வது பொய்! அவர் என்னை முகமெடுத்தே பார்க்கவில்லை."

"பூங்குழலி! அதற்கு ஒரு காரணம் இருக்கிறது."

"என்ன காரணம்?"

"இளவரசருக்கு இப்போது ரொம்ப கஷ்டகாலம்."

"யார் சொன்னது?"

"எல்லா ஜோசியர்களும் சொல்லியிருக்கிறார்கள். குடந்தை சோதிடர் என்னிடமே சொன்னார்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நீர் சொல்வது சரி!



மந்தையூர் என்னும் நாட்டை சோமநாதன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். சோமநாதன் மிகவும் நல்லவன். அவன் தன் நாட்டு மக்களைத் தன் குடும்பத்து உறுப்பினர்களைப் போல பார்த்துக்கொண்டும் பாதுகாத்தும் வந்தான். அம்மன்னனுக்கு முந்நூறு கிராமங்கள் சொந்தமாக இருந்தன. மன்னன் தனக்குச் சொந்தமான கிராமங்களில் வசிக்கும் மக்கள் எப்போதும் நியாயத்துக்குக் கட்டுப்பட்டு அமைதியாக வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நீதி மன்றத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு நீதி மன்றத்துக்கும் ஒரு நீதிபதியை நியமிக்கத் திட்டமிட்டான்.

நீதிபதியாக பதவியேற்பவர்கள் நியாயத்துக்கும் நேர்மைக்கும், கட்டுப்பட்டு இருக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணிய மன்னன் நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பதில் அதிக கவனமாக இருந்தான்.

மந்தையூர் நாட்டில் பவன் கொடி என்னும் ஒரு கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்தில் பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் வசித்து வந்தனர். அக்கிராமத்தில் கருப்பு சாமி என்ற சலவைத் தொழிலாளி வசித்து வந்தான்.

அவன் மனைவி முத்து லட்சுமி எப்போதும் தன் கணவனை எதற்கும் உபயோகமில்லாதவன் என்று திட்டிக் கொண்டே இருப்பாள். மந்தையூர் மன்னன் சோமநாதன் அவன் நாட்டில் இருந்த அத்தனை கிராமங்களிலும் ஒரு நீதிபதியை நியமிக்கப் போவதை தண்டோரா மூலமாகத் தெரிந்து கொண்ட சலவை தொழிலாளியின் மனைவி முத்து லட்சுமி தன் கணவனை எப்பாடுபட்டாவது தன் கிராமத்துக்கு நீதிபதியாக்க முடிவு செய்தாள்.

மன்னன் தன் ஆட்சியின் கீழ் இருந்த கிராமங்களுக்கு நீதிமன்றங்களையும் நீதிபதிகளையும் நியமிக்க தனக்கு மிகவும் நெருக்கமாகவும் நம்பிக்கையாகவும் இருந்த ஒரு அதிகாரியை ஒவ்வொரு கிராமமாகச் சென்று கிராமத்தில் நியாயமாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ளும் ஒரு மனிதரை நீதிபதியாக தேர்ந்தெடுக்கும்படி கூறினார்.

அதிகாரி ஒவ்வொரு கிராமமாகச் சென்று நீதிபதியைத் தேர்ந்தெடுக்கும் பணியை தொடங்கினார்.

சலவைத் தொழிலாளியின் மனைவி முத்து லட்சுமி தன் கணவனிடம் மன்னனால் நியமிக்கப்பட்ட அதிகாரி தங்கள் கிராமத்துக்கு வரும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ரகசியமாகக் கூறினாள்.

மன்னன் கட்டளையைச் செயற்படுத்த நியமிக்கப்பட்ட அதிகாரி சலவைத் தொழிலாளியின் கிராமத்துக்கு வந்துள்ளதைத் தெரிந்து கொண்ட சலவைத் தொழிலாளி அடிக்கடி அதிகாரியின் கண்களில் படும்படி உலா வந்தான். அவன் அதிகாரியை நேருக்கு நேர் பார்க்கும் போது தான் போர்த்தி இருக்கும் மேல் துண்டை எடுத்து தன் சட்டையை அடிக்கடி துடைத்துக் கொள்வான். எதிரில் யாராவது வந்தால் உடனே அவன் அவர்கள் அருகில் செல்லாமல் சற்று தள்ளியே நடந்து செல்வான். அடிக்கடி இது போல் செய்வதைப் பார்த்தார் அதிகாரி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை எண்ணியே வருந்தி தளர்ந்து விடாமல் நல்லவைகளை செய்ய எழுந்து நடைபோடுவதே சிறப்பம்சமாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சைவ சமயத்தைக் காப்பாற்ற துறவற சபையை உருவாக்க வேண்டும்

ஈழத்தில் சைவ சமயத்துக்குப் பேராபத்து வந்துவிட்டது. சைவ சமயத்தை முற்று முழுதாக அழிக்க வேண்டும் என்பதில் சிங்களப் பேரினவாதமும் அவர்களோடு சேர்ந்தவர்களும் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இதற்கும் மேலாக, அரச நிர்வாக மட்டத்திலும் சைவ சமயப் பழிவாங்கல்கள் மிக நுட்பமாக நடந்தாகிறது.

இவ்வாறு சைவ சமயத்தை வேரறுக்கின்ற நடவடிக்கை இன்று நேற்று ஆரம்பமானதல்ல.

இலங்கை குடியேற்றவாதத்துக்குள் அகப்பட்ட காலத்தில் இருந்து இந்நிட்டூரம் தொடங்கிற்று.

ஆரம்பத்தில் அன்னியராட்சியில் இடம் பெற்ற மதமாற்ற முயற்சிகள் சைவ சமயத்தைக் கடுமையாகப் பாதித்ததாயினும் அன்று சைவ மக்கள் தங்களின் சமயத்தைப் பாதுகாப்பதற்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாராகி இருந்தனர்.

அதனால் அன்று சைவ சமயத்துக்குச் செய்யப்பட்ட அட்டூழியங்களில் இருந்து சைவ சமயம் காப்பாற்றப்பட்டது.

ஆனால் இன்றைய நிலைமை அதுவன்று. சைவ சமயத்தவர்களின் வீடுகளுக்கு வந்து மதமாற்றம் செய்கின்ற அளவில் நிலைமை முற்றிவிட்டது.

உதவி என்ற பேரில் பணத்தையும் உலர் உணவுப் பொருட்களையும் வழங்கி, ஏழை மக்களை மதமாற்றி அந்த மக்களை தங்களின் இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்ற அடக்குமுறைகளும் உச்சமடைந்துள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில், சைவ சமயத்துக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தை இன்னமும் நம் சைவ மக்கள் அதிலும் குறிப்பாக சைவ இளைஞர்கள் புரிந்து கொள்வதாக இல்லை.

ஆம், ஆலயங்களில் நடைபெறுகின்ற பூசை வழிபாடுகளும் மகோற்சவங்களும் சைவ சமயத்தைப் பாதுகாக்கும் என நாம் நம்புகின்றோம்.

ஆனால் சைவ சமயத்தைப் பாதுகாக்க வேண்டுமாயின், அதற்கு இளைஞர் சேனை அவசியமாகின்றது.

ஆம், நாயன்மார்கள் காலத்தில் எங்ஙனம் பக்தி இயக்கங்கள் எழுச்சி பெற்று சைவ சமயத்தை பிற மத ஆதிக்கத்தில் இருந்து காப்பாற்றினவோ அதுபோல நம் சைவ சமயத்தை காப்பாற்ற நம் இளைஞர்கள் தயாராக வேண்டும்.

இதை நாம் கூறும்போது பலர் பலவாறாகச் சிந்திக்கலாம். அந்தச் சிந்தனை பழைய பதிவுகளின் விளைவாகவும் இருக்கலாம்.

ஆனால் நாம் கூறுவது; எங்ஙனம் பௌத்தத்தை, கத்தோலிக்கத்தை துறவிகள் காப்பாற்றி வருகின்றனரோ அதுபோல சைவ சமயத்திலும் துறவற சபை உருவாக வேண்டும்.

சமயப் பற்றுடைய – இறை ஞானத்தை தேடுகின்ற இளைஞர்கள் தூய்மையான துறவு வாழ்வு மேற்கொண்டு சைவ சமயத்தைப் பாதுகாத்துத் தர வேண்டும்.

இதை நாம் செய்யாமல் – அதுபற்றிச் சிந்திக்காமல் விடுகின்ற ஒவ்வொரு கணப்பொழுதும் சைவத்தை இல்லாதொழிக்கின்ற அடாவடித்தனங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும் கவனம்.

# விளையாட்டுப் போட்டியில் மரதன் ஓடிய மாணவன் மரணம்

## வைத்தியசாலை முன்பாக போராட்டம்

(திருக்கோவில்)

திருக்கோவில் - மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலய மாணவனின் மரணத்திற்கு நீதி கோரி திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்னால் பொதுமக்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

திருக்கோவில் - மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை விளையாட்டு போட்டியின் போது மரதன் ஓட்டப்போட்டியில் பங்கேற்ற மாணவன் திடீரென மயக்கமுற்ற நிலையில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யபட்ட நிலையில் அங்கு அம்மாணவன் உயிரிழந்துள்ளார்.

இதனை அடுத்து குறித்த மாணவன் உயிரிழந்த சம்பவத்தை அறிந்த பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் மரணமடைந்த மாணவனுக்கு சிகிச்சை அளிக்க தவறிய திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக ஒன்று கூடி மாணவனின் மரணத்திற்கு வைத்தியர்களின் அலட்சிய நிலையே காரணம் என தெரிவித்து நீதி கோரி போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், உயிரிழந்த மாணவன் எந்தவொரு சிகிச்சையுமின்றி மூன்று மணித்தியாலயத்தின் பின் மரணம் அடைந்ததாக சுட்டிக்காட்டினர்.

மேலும் இச்சம்பவத்தில் திருக்கோவிலை சேர்ந்த 16 வயது மதிக்கத்தக்க ஜெயக்குமார் விதுர்ஜன் என்னும் மாணவனே உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்திற்கு மேலதிக பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டுள்ளதுடன் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அருகில் மரணமடைந்த மாணவனுக்கு நீதிகோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# அதிகளவு சேலைன் செலுத்தியதால் இளம் குடும்பப் பெண் மரணம்

## திருகோணமலையில் சம்பவம்

அதிகளவு சேலைன் செலுத்தியதால் இளம் குடும்பப் பெண்ணொருவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று திருகோணமலை பொது வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், கடந்த 09 ஆம் திகதி காய்ச்சல் மற்றும் சிறுநீரகத்தில் கிருமி தொற்று என திருகோணமலை வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட ரஞ்சித்குமார் கௌசல்யா எனும் 37 வயதான குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அனுமதிக்கப்பட்ட நேரத்தில் இருந்து சிறுநீர் வெளியேறாத நிலையில் தொடர்ந்து 7 - 8 சேலைன்கள் மட்டும் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நோயாளியின் குருதி அமுக்கமும் குறைவடைந்து செலுத்திய சேலைன் அனைத்தும் சுவாசப்பை மற்றும் இதயப்பகுதிகளில் தேங்கியதால் நோயாளிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

பின்னர் உயிரை காப்பாற்றும் கட்டம் தாண்டிய நிலையில் நள்ளிரவு மருத்துவ பிரிவு வைத்தியர்களுக்கு அவசரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னரே நோயாளி அவசர விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இருந்தும் அங்கு சிகிச்சை பலனின்றி குறித்த பெண் நேற்று முன்தினம் அதிகாலையில் உயிரிழந்துள்ளார். (ம-7,10)

# ஆட்டோ சாரதியை கத்தியால் குத்திவிட்டு பணம் கொள்ளை

(கொழும்பு)

கரந்தெனிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திவியகஹவெல, பனலிய பிரதேசத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் சாரதியை கத்தியால் குத்தி பணத்தை கொள்ளை அடித்து சென்றுள்ளனர்.

காயமடைந்த சாரதி எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் எல்பிட்டிய நகரில் உள்ள தேவாலயத்திற்கு அருகில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் வாடகை வண்டி சாரதியுடன் திவியகஹவெல பிரதேசத்திற்கு செல்வதற்காக குறித்த இருவரும் முச்சக்கர வண்டியில் ஏறியுள்ளனர்.

பிற்பகல் 2 மணி அளவில் முச்சக்கரவண்டியில் பயணித்தவர்கள் திவியகஹவெல, பனலிய பிரதேசத்தில் சாரதியை தாக்கி கத்தியால் காயப்படுத்தி அருகில் உள்ள காணிக்கு அழைத்துச் சென்று பணம் மற்றும் தொலைபேசியை அபகரித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,10)

### துவிச்சக்கரவண்டி திருட்டு

# புதுக்குடியிருப்பில் இளைஞன் கைது

புதுக்குடியிருப்பில் துவிச்சக்கரவண்டி திருட்டுடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் சிவராத்திரி தினத்தன்று கந்தசாமி கோயிலுக்கு வந்த பக்தருடைய துவிச்சக்கர வண்டி பகல் 12 மணியளவில் திருடப்பட்டுள்ளது.

இதனையடுத்து துவிச்சக்கரவண்டி உரிமையாளரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரின் தேடுதலின் போது குறித்த நபர் துவிச்சக்கர வண்டியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞன் கைவேலி சுண்ணாம்புகூளையடி வீதியில் வசிக்கும் 28 வயதுடையவர் என்பதுடன், இவர் ஏற்கனவே துவிச்சக்கரவண்டி திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையதோடு துவிச்சக்கர வண்டியும் இவரிடமிருந்து மீட்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10,299)

# பெரிய வெங்காயத்தின் விலை 1000 ரூபாவை தொடும்

## இறக்குமதியாளர்கள் சங்கம் எச்சரிக்கை

அரசாங்கம் உடனடியாக தலையிட்டு வெங்காயம் இறக்குமதிக்கு இந்தியாவிடம் இராஜதந்திர கோரிக்கை விடுக்காவிட்டால், வெங்காயத்தின் விலை 1,000 ரூபாவை தொடும் என இறக்குமதியாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மொத்த வியாபார சந்தையில், பெரிய வெங்காயத்தின் விலை நேற்று முன்தினம் 580-600 ரூபா வரை அதிகரித்து, சில்லறை விலையாக 700 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம் கையிருப்பில் உள்ளதாகவும், பாகிஸ்தான், இந்தியா ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை கடுமையாக்கியதால் வெங்காய இறக்குமதி நிறுத்தப்பட்டதே இதற்கு காரணம் என்றும் கொழும்பு வெங்காய இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி இலங்கை அரசாங்கம் தலையிட்டு இந்தியாவிடம் கோரிக்கை விடுக்க முடியும் எனவும், அரசாங்கத்திடம் பல தடவைகள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கொழும்பு பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் மேலும் கூறியுள்ளனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

19

**உயிர் - எகர ஒகர சீர்திருத்தம்**

பழைய முறையில் எ, ஒ என னும் குறில் எழுத்துகள் எ், ஒ் என இருந்தன. அவை புதிய முறை யில் எ, ஒ எனத்திருத்தப்பட்டது. அதேபோல் பழைய முறையில் நெடில் எழுத்துக்களாக இருந்த எ, ஒ என்பன புதிய முறையில் ஏ, ஓ ஆக திருத்தப்பட்டது. அதாவது எ, ஒ என்னும் குற்றெழுத்துகளில் மேலே உள்ள புள்ளியை நீக்க வேண்டும் ஏகாரத்துக்குக் கீழே காலிட வேண்டும் ஓகாரத்துக்குச் சுழி தந்து எழுத வேண்டும் என் பவை அவர் செய்த மாற்றங்கள்.

**உயிர்மெய் - எகர ஒகர மாற்றம்**

உயிர்மெய்க் குறில் எகர ஒகரங் களுக்குப் புள்ளி (எ், ஒ்)உண்டு என்பது பழைய இலக்கணவிதி. ஆனால் இவ்விதியை மாற்றி உயிர்மெய்க்குறில் எகர ஒகரங் களுக்கு ஒற்றைக் கொம்பையும் உயிர்மெய்நெடில் ஏகார ஓகாரங் களுக்கு இரட்டைக் கொம்பையும் அமைத்தார். உதாரணமாக கெ,கே ஆகியவற்றை எடுப்போமானால் பழைய முறையில் எகர, ஏகாரம் ஆக கெ எழுத்து இருந்தது. இதனை வீரமாமுனிவர், எகரமாக கெ எழுத்தையும் ஏகாரமாக கே எழுத்தையும் உருவாக்கினார். இதேபோல கொ,கோ ஆகியவற்றை எடுப்போமானால் பழைய முறை யில் ஒகர, ஓகாரம் ஆக கொ்,கொ எழுத்துக்கள் இருந்தன. இதனை வீரமாமுனிவர், ஒகரமாக கொ எழுத்தையும் ஓகாரமாக கோ எழுத்தையும் உருவாக்கினார்.

அகரவரிசை உயிர்மெய்க்குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் கரு தப்பட்டன. (உதாரணம் க.= கா, த.= தா). ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின் முன் இரட்டைப் புள்ளி இட்டனர். (உதார ணம் ..க = கை). அதாவது ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப் புள்ளிகளுக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக் கொம்பு (ை) பயன்படுகின்றது.

எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இரு புள்ளி கள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட் டன. (உதாரணம் கெ…= கௌ, தெ..= தௌ). அதாவது ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்து க்குப் பின் இருந்த இரட்டைப்புள் ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுகின்றது.

**உதாரணம்**

| பழைய விதி | புதிய மாற்றம் |
|---|---|
| க. | கா |
| ..க | கை |
| கெ... | கௌ |

ரகரத்திற்குக் (ர) கால் இட்டு மற்ற நெடில் குறியாகிய “ா” லிருந்து வேறுபடுத்தினார். உதாரணமாக “பாவை” என்று எழுதினால் ‘இது பரவையா அல்லது பாவையா' என ஐயுறும் நிலைமை இருந்து வந்தது. வீரமாமுனிவர் தான் ரகர உயிர் மெய் எழுத்தினை “ர” என கால் வைத்து எழுதும் முறையை உரு வாக்கினார்.

**வீரமாமுனிவர் பற்றி சில வரிகள்....**

வீரமாமுனிவர் (நவம்பர் 8. 1680 - பெப்ரவரி 4.1742) இத்தாலி நாட்டிலுள்ள கேசுதிகிலியோன் என் னும் இடத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் - கான்ஸ்டன்டைன் ஜோசப் பெச்கி. இவர் இயேசு சபையைச் சேர்ந்த குரு ஆவார். கிறித்தவ மதத்தைப் பரப்பும் நோக் கில் 1709 ஆம் ஆண்டு இயேசு சபைப் குருவான பின் 1710 ஆம் ஆண்டு தமிழகத்துக்கு வந்தார்.

இவர் தமிழ் மொழியின் வளர்ச்சி க்கும், முன்னேற்றத்திற்கும் சிறப்பான பணிகளைச் செய்துள்ளார். 23 நூல்களைத் தமிழில் எழுதியுடன், இயேசுக் கிறித்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பின் வரலாற்றையும் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப “தேம் பாவணி” என்ற பெருங்காவியமாக இயற்றியது இவரின் தமிழ்ப் புல மைக்குச் சான்றாக உள்ளது.

திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்னூல், ஆத்திசூடி ஆகிய நூல் களைப் பிற மொழிகளில் மொழி பெயர்த்தவர். தமிழ் கற்க ஏதுவாக தமிழ் - லத்தீன் அகராதியை உரு வாக்கினார். அதில் 1000 தமிழ்ச் சொற்களுக்கு லத்தீன் விளக்கம் அளிக்கப்பட்டது. இதுவே முதல் தமிழ் அகரமுதலி ஆகும். பின்பு 4400 சொற்களைக் கொண்ட தமிழ் - போத் துக்கீய அகராதியை உருவாக்கினார்.

அந்த காலத்தில் சுவடிகளில் மெய் எழுத்துகளுக்குப் புள்ளி வைக்காமல் கோடு போடுவது வழக்கம். நெடில் எழுத்துகளைக் குறிக்க, ‘ர' சேர்த்த னர். இதை மாற்றி ‘ஆ', ‘ஏ', ‘ஓ' ஆகிய நெடில் எழுத்துகளைக் கொண்டு வந்தார். பல்வேறு தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் கவிதை வடிவில் இருந்தன. மக்கள் சிரமமின்றிப் படிக்கவேண்டும் என்ற நோக்கில் அவற்றை உரைநடையாக்கினார்.

தமிழில் 23 நூல்களை எழுதியுள் ளார். ஒன்பது மொழிகளில் புலமை பெற்றவர். பெயராலும், பண்பாட் டாலும் தமிழராகவே வாழ்ந்தவர், தனது 67 ஆவது வயதில் மறைந் தார்.

**பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்.**

அட்டவணை 2 இல் காட்டியவாறு ணா, றா, னா, ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளை திருத்தினார். அச்சுக்கோப்பதற்காக இவ்வெழுத்துக ளுக்குத் தனி அச்சுகள் உருவாக் கப்பட வேண்டியிருந்தது. இக்குறை களை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார். பெரியார் ஈ.வெ. இராமசாமி 1934 ஆம் ஆண்டு தமிழ் எழுத்துக் களில் மாற்றத்தை கொண்டு வந்தார். தான் நடத்திய “விடுதலை” என்ற நாளி தழில் இந்த மாற்றத்தை கொண்டு வந்தார்.

1978 ஆம் ஆண்டளவில் கீழ்க் கண்ட எழுத்துக்களில் மாற்றம் ஏற் பட்டது. ஏனைய பகுதிகளான இல ங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரி சியசு, ரீயுனியன் மற்றும் தமிழ் பேசும் பகுதிகள் பாரம்பரிய எழுத் துக்களையே தொடர்ந்து பாவித்தன. ஆனால் 1983 இல் சிங்கப்பூர் அரசு இச் சீர்திருத்தத்தை ஏற்றது. 1984 தைத்திங்கள் முதல் செயற்படுத் தியது.

இச் சீர்திருத்தம் மற்றைய நாடுக ளிலும் தற்போது நடைமுறைப் படுத் தப்பட்டுள்ளன. பெரியாரால் முன் மொழியப்பட்ட ஐ என்பதற்குப் பதில் அய் மற்றும் ஔ என்பதற்குப் பதில் அவ் ஆகியவை மாற்றமடைய வில்லை.

**அட்டவணை 2**

| பழைய முறை | புதிய முறை |
|---|---|
| ஞு | ணா |
| ரு | றா |
| ஞ | னா |
| ஊண | ணை |
| ஊல | லை |
| ஊள | ளை |
| ஊன | னை |
| ெஞு | ணொ |
| ெரு | றொ |
| ெஞ | னொ |
| ேஞு | ணோ |
| ேரு | றோ |
| ேஞ | னோ |

**பெரியார் பற்றி சில வரிகள்.....**

பெரியார் என்று பரவலாக அறி யப்படும் ஈ. வெ. இராமசாமி (இயற் பெயர்: ஈ. வெ. இராமசாமி, ஆங்கில மொழி: E.V. Ramasamy, செப்டெ ம்பர் 17.1879 - டிசெம்பர் 24. 1973) சமூக சீர்திருத்தத்திற்காகவும், சாதியை அகற்றுவதற்காகவும், மூட நம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும், பெண் விடுத லைக்காகவும் போராடியவர். தமிழ கத்தின் மிக முக்கியமான இயக்க மாகக் கருதப்படும் திராவிடர் கழக த்தினைத் தோற்றுவித்தவர்.

இவருடைய சுயமரியாதை இயக் கமும், பகுத்தறிவுவாதமும் மிகவும் புகழ்பெற்றது. இவர்வசதியான, முற்பட்ட சாதியாகக் கருதப்பட்ட நாயக்கர் என்ற சமூகத்தில் பிறந் திருந்தும், சாதிக்கொடுமை, தீண் டாமை, மூடநம்பிக்கை, வர்ணாஸ் ரம தர்மம் கடைப்பிடிக்கும் பார்ப் பனியம், பெண்களைத் தாழ்வாகக் கருதும் மனநிலை போன்றவற்றை எதிர்த்து மக்களுக்காகக் குரல் கொடு த்தார்.

இம் மன நிலை வளரக்காரண மானவை மக்களிடையே இருக்கும் மூடநம்பிக்கையும், அந்த மூட நம் பிக்கைக்குக் காரணமாக இருக்கும் கடவுள் நம்பிக்கையும், கடவுள் பெயரால் உருவான சமயங்களும் தான் என்பதைக் கருத்தில் கொண்டு ஈ.வெ.ரா.தீவிர இறை மறுப்பா ளராக இருந்தார்.

(தொடரும்)

| | பழைய விதி | புதிய மாற்றம் |
|---|---|---|
| குறில் | எ், ஒ் | எ, ஒ |
| நெடில் | எ, ஒ | ஏ, ஓ |

| | பழைய விதி | புதிய மாற்றம் |
|---|---|---|
| | குறில் நெடில் | குறில் நெடில் |
| எகர, ஏகாரம் | கெ | கெ, கே |
| ஒகர, ஓகாரம் | கொ் , கொ | கொ , கோ |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கைதடி கிழக்கில்...

கைதடியைச் சேர்ந்த 81 வயதான முதியவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணத்திற்கான காரணம் இது வரை தெரியவராத நிலையில் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,30)

## 7 மோட்டார்...

யில் மோட்டார் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து பாடசாலை நிர்வாகத்தால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார், விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அப்பகுதியில் இருந்து 7 மோட்டார் குண்டுகளை மீட்டனர்.

மீட்கப்பட்ட மோட்டார் குண்டுகளை வவுனியா நீதிமன்றின் அனுமதியுடன் அழிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,10, 250)

## ஏப்ரலில்...

வித்துள்ளார்.

குளியாப்பிட்டியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

அஸ்வெசும திட்டத்தின் கீழ் சமுர்த்தியை விட மூன்று மடங்கு நன்மைகள் வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் 24 இலட்சம் பேருக்கு அந்த நன்மைகள் கிடைக்கும்.

எதிர்வரும் புத்தாண்டில் அந்த அனைத்து குடும்பங்களுக்கும் 20 கிலோ அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சிங்கள - தமிழ் புத்தாண்டு முதல் அரச ஊழியர்களின் சம்பளத்தில் பத்தாயிரம் ரூபாய் சம்பள உயர்வு கிடைக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7,10)

## பூசகர் உள்ளிட்ட...

தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர் என்று சட்டத்தரணிகள் கடந்த சனிக்கிழமை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்படி 8 பேரையும் மன்றின் உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அழைத்துச் சென்றிருந்தனர்.

இதன்போது மேற்படி 8 பேரினதும் உடல் நிலையைக் கருத்தில்கொண்டு அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்குகளுடன் அவர்கள் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7,10)

## எனது அழைப்பை...

பொறுப்பேற்றதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதிய "சதி" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் பிரதமர் பதவியை ஏற்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அவர் நிராகரித்ததாகவும் அந்த புத்தகத்தின் 163ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோது தன்னால் உடனடியாக பதவியை ஏற்க முடியாது என்றும், அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் கோட்டாபய குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அந்த நூலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"இந்த வன்முறைக்கு மத்தியில் ஆட்சி மாற்றம் தேவை என்ற கோரிக்கைக்கு அமைய பிரதமர் பதவிக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரை நியமிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவேதான் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை பிரதமர் பதவியை ஏற்குமாறு கேட்டுக் கொண்டேன்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் நாட்டை ஆட்சி செய்ய முடியாது எனக் கூறி அவர் எனது கோரிக்கையை நிராகரித்தார். அதன் பின்னர் சரத் பொன்சேகாவுடன் பேசி பிரதமர் பதவியை ஏற்குமாறு கேட்டுக் கொண்டேன்.

அவர் தன்னை பிரதமராக நியமிப்பதை பகிரங்கமாக அறிவிக்குமாறும், அதனைத் தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் குறிப்பிட்டார். எனினும் அவருக்கு வழங்கப்பட்ட பதவியை அவர் உடனடியாக ஏற்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,10)

## நீரை...

எது.

வரட்சியான காலநிலை 2 மாதங்களுக்கு மேல் நீடித்தால், பகுதியளவில் நீர் வழங்கப்பட வேண்டும் என சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அபிவிருத்தி திருமதி அனோஜா களுவாராச்சி தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தற்போதைய நீர் மட்டம்போதுமான தாக இருப்பதாகவும், முடிந்த வரை அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே தண்ணீரை பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (ம-7,10)

## யானை...

61 வயதுடைய முத்துச்சாமி கிருஸ்ணசாமி என்பவரே யானையின் தாக்குலினால் உயிரிழந்துள்ளார்.

காலைக்கடன் கழிப்பதற்காக காட்டுப் பகுதிக்குச் சென்றபோதே யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் யானை தாக்கியபோதும் நேற்றுக் காலையிலேயே சடலம் கிராம மக்களினால் கண்டெடுக்கப்பட்டது. (ம-7,10,350)

## பொலி...

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு. அகத்தியர் அடிகளாரின் அழைப்பின் பேரில் நல்லை ஆதீனம் முன்பாக நேற்றுமாலை 4 மணிக்கு போராட்டம் இடம்பெற்றது.

மகா சிவராத்திரி பூசையின்போது வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு வழிபட சென்றவர்கள் மீது பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்தும் கைது செய்தோரை உடன் விடுதலை செய்யவும் வலியுறுத்தி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சித்தார்த்தன், கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிகாந்தா, சரவணபவன், கலாநிதி ஆறு.திருமுருகன், வேலன் சுவாமி, நல்லை ஆதீன குரு முதல்வர், தவத்திரு அகத்தியர் அடிகளார், மதகுருமார்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,10,33)


தன நிதானய
திகதி - 2024.03.11
சீட்டிழுப்பு இலக்கம் 1446
W 67 75 78 80 W
Double Chance 40223

மஹஜன சம்பத
திகதி 2024/03/11
சீட்டிழுப்பு இலக்கம் 5416
F 7 7 0 6 6 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 11/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1764
J 02 29 50 67 72
23018

லக்கி 7 VIP
திகதி 2024.03.11
சீட்டிழுப்பு இலக்கம் 0242
O 6 5 5 9 9 2 O

கொவிசத
சீட்டிழுப்பு இலக்கம் 3658
சீட்டிழுப்பு திகதி 11.03.2024
N 57 68 70 80
N 18124
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.11
சீட்டிழுப்பு இலக்கம் 0725
கும்பம் 28 38 39 48 கும்பம்
37178 12

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர் தன சம்பத
11.03.2024 வெற்றி வாரம் 124 வர்ணம் ஊதா
K 0 2 1 6 2 1
D
ரூ. 30,909,736.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2390 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 11.03.2024 தினம் திங்கள்
04 35 60 68 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,568,140.00

சனிதா
திகதி 2024.03.11 வெற்றி வாரம் 4551 வர்ணம் இளம் நீலம்
13 19 24 66 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,619,800.00
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4102 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.11 தினம் திங்கட்கிழமை
01 03 34 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.10,840,172.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 36 02 37 40 67
1566 பச்சை 11.03.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 511,189,198.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2024.03.11 வெற்றி வாரம் 2007 வர்ணம் செம்மஞ்சள்
16 45 46 50 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,412,900.40
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2216
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2024.03.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.98,019,914.40
05 54 58 73 M


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### நாட்டை கட்டியெழுப்ப முன்னர்

# மக்களின் உணவு உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் - அநுர

(கொழும்பு)

நாட்டை கட்டியெழுப்ப முன்னர் நாட்டு மக்களின் உணவு உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் சகல உரிமைகளும் தற்போது இல்லாமல் போயுள்ளது.

நாட்டு மக்களுக்கு சிறந்த நிலைமையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம்.

எங்கள் மத்தியில் வேற்றுமைகள் இருக்கலாம். எனினும் பொது நோக்கத்திற்காக இணைந்துள்ளோம்.

மக்களுக்கு உண்ண உணவில்லை முதலில் நாங்கள் எமது நாட்டு மக்களின் உணவு உரிமையை உறுதிப்படுத்துவோம். உண்பதற்கு உணவின்றி கட்டியெழுப்பப்படும் நாடு பயனற்றது.

பொருளாதாரம் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்.

எனினும் மக்களுக்கு உண்ண உணவில்லை. உண்ண உணவில்லாத பொருளாதாரத்தால் என்ன பயன்.

நாட்டு மக்கள் ஒரு மாதத்திற்கு 6 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசியை பயன்படுத்துகின்றனர். வருடத்திற்கு 23 லட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன். 35 லட்சம் மெற்றிக் தொன் கையிருப்பில் இருக்க வேண்டும்.

எமது நாட்டில் பெரும் போகத்தின் போது சுமார் 18 ஆயிரம் ஹெக்டேயரில் நெல் பயிரிடப்படுகிறது.

அரிசி சந்தையின் ஏகபோகத்தை உடைத்தெறிவோம். எமது நாட்டுக்கு தேவைப்படும் அளவுக்கு மேல் நாம் அரிசியை உற்பத்தி செய்கின்றோம். மேலதிக கையிருப்பும் இருக்கின்றது.

எனினும் விவசாயிக்கு தனது நெல்லை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியவில்லை. நுகர்வோருக்கும் நியாயமான விலையில் அரிசியை கொள்வனவு செய்ய முடியவில்லை.

எமது நாட்டின் அரிசிச் சந்தையில் ஒரு பிறழ்வு காணப்படுகிறது.எமது நாட்டின் நெல் சந்தையில் ஒரு ஏகபோகம் உருவாக்கப்பட்டுள்ளது.

அவர்களே எப்போதும் விலையை தீர்மானிக்கின்றனர். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் அரிசி சந்தையின் ஏகபோகத்தை கட்டாயம் உடைத்தெறிவோம் எனவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-7.10)

## வெளிப்படை...

நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர் பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அழைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனும் கலந்துகொண்டதுடன் சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலில் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்மானங்களை எட்டுவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு இங்கு வலியுறுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தினால் தயாரிக்கப்பட்ட பகுப்பாய்வு தரவுகளுடன் கூடிய அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் வலியுறுத்தினார்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பான தரவு பகுப்பாய்வு அறிக்கைகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பாராளுமன்றத்துக்கும் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதே அரசாங்கத்தின் விருப்பம் என தெரிவித்த ஜனாதிபதி, இந்த முன்மொழிவுகளை சர்வதேச நாணய நிதியத்துடன் மேலும் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உட்பட ஏனைய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துரையாடலுக்கு அழைக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

அந்தக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் சாதகமான மற்றும் சரியான வேலைத் திட்டத்திற்கு தனது ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்தார்.

இருதரப்பு கடன் வழங்குநர்கள், வர்த்தக கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்களுடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் குறித்து திறைசேரியின் செயலாளர் மகிந்த சிறிவர்தன, விரிவான விளக்கத்தை அளித்ததுடன், இந்த பேச்சுவார்த்தைத் சுற்றுகளை இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகைத் தீர்ப்பு தொடர்பான அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும், அதற்கான விரிவான கட்டமைப்பு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட பலர் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டமை குறிப்பித்தக்கது. (ம-7,10)

## வட்டுவில்...

சென்றுவிட்டு வட்டுக்கோட்டை திரும்பும்போதே குறித்த வாள்வெட்டு தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

காயமடைந்தவர் வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

முன்னர் நடந்த வாள்வெட்டு சம்பவத்திற்கு பழிதீர்க்கும் வகையில் குறித்த வாள்வெட்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

(ம-7,10,33)

# மரண அறிவித்தல்



## கிருஸ்ணன் தேவராஜா (தேவு)

### (கிருஸ்ணன் தச்சுப்பட்டறை உரிமையாளர்)

சங்குவேலியை பிறப்பிடமாகவும் புளியடி வைரவர் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணன் தேவராஜா அவர்கள் 09.03.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் மீனாதேவி(நல்லம்), பராசக்தி(ஓய்பெற்ற பெண் பரிசோதகர் சங்கானை) ஆகியோரின் அன்புக் கணவரும் உமா(பிரான்ஸ்), உசா, நிமால் (பிரான்ஸ்), ஜெமில்(பிரான்ஸ்), லக்சனா(வவுனியா அபிவிருத்தி உத்தியோகத்தர் - வவுனியா மேல் நீதிமன்றம்), துளசிகா(லண்டன்), ஐங்கரன்(துளசன்), (கிருஸ்ணா மர ஆலை உரிமையாளர் - உடுவில்), சிவகரன் (சிவம் - சிவில் எஞ்சினியர்) ஆகியோரின் அன்பு தகப்பனாரும் சுரேஸ் (பிரான்ஸ்), வசந்தகுமார்(விநாயகர் அரிவு ஆலை உரிமையாளர்), கேதீஸ்வரி (பிரான்ஸ்), விஜய்(பிரான்ஸ்), சுதேஸ் பிரியந்த(வவுனியா இலங்கை போக்குவரத்து சாலை - வவுனியா), அனுஷாந்தன்(லண்டன்), லாவண்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிவேதா, நிவேதன், நிதுசன், ஷாம்பவி, ஷாருயா(பிரான்ஸ்), யதுசன்(யது - I.M.S), சரண்யா (கொழும்பு பல்கலைக்கழகம்), பிருத்வி, ஹரனி, ஹிரிசாந், கவிஸ்(லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.03.2024 புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 580 6434
077 155 5587

தகவல்:
(047) குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (045)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

Village Hotel Jaffna Express

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் → உரும்பிராய் → திருநெல்வேலி → யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

(191118)

தொடர்புகளுக்கு

077 544 8503

விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (028)

074 17 37 684

சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.



சம்பளம்: 40'000/-

(C-8516)



வயது: 21 முதல் 40 வரை

தொடர்புக்கு:-

0777068777

V2 VISA SERVICES

கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8516)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org